07.04.2026 OS.No.131/2024 PW1 Name :.அப்துல் ரஹீம் சாகிப்

குறுக்கு விசாரணை

1. வழக்கிற்கான தகவல்களை நான்தான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். வழக்கு சொத்தில் 275 சதுரடியை அரசாங்கம் எடுத்து கொண்டுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை ஆனால் ஆவணங்கள் உள்ளது கேட்டால் தாக்கல் செய்வேன். வழக்கறிஞர் அதை கேட்காததால் அதை தாக்கல் செய்யவில்லை. வழக்கில் ராமசந்திரன் மட்டும் தான் பிரதிவாதியாக உள்ளார். ஜமாலுக்கும் எனக்கும் பழக்கம் எதுவும் இல்லை. வழக்குரையில் 5ம் பத்தியில் ஜமாலின் முழுவிவரம் குறிப்பிட்டுள்ளேன்.
2. ஜமாலின் மூலமாக பிரதிவாதி ராமசந்திரனுக்கு சொத்தின் உரிமை சென்றதாக குறிப்பிட்டுள்ளேன். 5ம் பத்தியில் ஜமாலுக்கும் ராமசந்திரனுக்கும் இடையில் கிரைய ஒப்பந்தம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி சொல்லிதான் அது தெரியும். பிரதிவாதி வழக்கு சொத்தில் உள்ள பிரச்சனையை 6 மாதத்தில் தீர்த்து கொடுப்பதாக என்னிடம் கூறினார். அவ்வாறு 6 மாதத்தில் தீர்த்து கொடுக்காமல் 6 மாதத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளார்.
3. அதை நான் ஆட்சேபனை செய்ததாக பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளேன் அது தொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் பிரதிவாதியை கூப்பிட்டு விசாரித்தார்கள். காவல்நிலைய விசாரணையில் பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் பற்றி கூறவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு கொடுத்த பதில் அறிவிப்பில் பிரதிவாதி ஒப்பந்தம் பற்றி கூறியுள்ளார். அதை

வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

4. அது வழக்கில் தாக்கல் செய்யபடவில்லை என சாட்சி கூறுகிறார். அசல் ஆவணங்கள் என்னிடம் மட்டும் தான் உள்ளது. வேறு யாரிடமும் இல்லை. அசல் ஆவணத்தின் நகல் யார் யாருக்கு கொடுத்துள்ளேன் என்று எனக்கு தெரியவில்லை. நான் கொடுக்காமல் அசல் ஆவணம் வெளியே போகாது என்றால் அதுபற்றி நான் கூறமுடியாது. 1994 ஆண்டிற்கான அசல் ஆவணம் என்னிடம் உள்ளது. அதை கேட்டால் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். அந்த ஆவணத்தை ஜமாலிடம் கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை.
5. தற்போது என்னிடம் காட்டபடும் அந்த ஆவணத்தின் நகலின் உண்மைதன்மை குறித்து என்னால் கூறமுடியாது. அந்த ஆவணத்தை ஜமாலிடம் கொடுத்து அவரிடம் குறிப்பிட்ட தொகையை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த பதிலை படித்து பார்த்தேன். பதிலில் எனக்கும் ஜமாலிக்கும் இடையில் வாட்ஸ்ஆப் மூலமாக உரையாடல் நடந்துள்ளதாக கூறியுள்ளார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளிள்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கபடுகிறது).

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 07/04/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.07 17:52:10 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.